மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.05/2022
அ.வ.எண்.301/2015

J. சரவணகுமார் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. N. ஜெகநாதன்
2. சண்முகசுந்தரம்
3. சுரேஷ்
4. சாந்தப்பன்
5. நல்லபிரபு
6. ராஜு
7. நரசம்மாள்
8. சகுந்தலா
9. மகேஸ்வரி
10. செல்வமணி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 23.02.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு,P.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சரவணன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.மோகன்ராம் அவர்கள் ஆஜராகியும், 7 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாகவும், 10ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.கணபதி சுப்ரமணியன் அவர்கள் ஆஜராகி, செலவுத்தொகையின் பேரில் மனுவினை அனுமதிப்பதில் ஆட்சேபணை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் கடந்த 28.03.2022ம் தேதியில் வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி

செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் :–

மனுதாரர்/வாதியால் விளம்புகை, தனி சுவாதீனம், பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்து, வழக்கு கடந்த 21.02.2022 ம் தேதியன்று மனுதாரரின் தாயாரும், உத்தேசதரப்பினருமான 10 ம் எதிர்மனுதாரரின் பதிலுரைக்காக வாய்தா போடப்பட்டு, பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, 28.03.2022 ம் தேதியன்று வாய்தா போடப்பட்டது. இதுகுறித்து மனுதாரரின் வழக்கறிஞருக்கு தெரியாததால் வழக்கறிஞர் வேறொரு நீதிமன்றத்திற்கு சென்றுவிட்டதாலும், கடந்த 28.03.2022 ம் தேதியன்று மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததாலும், மனுதாரராலும், அவரது வழக்கறிஞராலும் ஆஜராக இயலவில்லை. தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே கடந்த 28.03.2022 ம் தேதியில் வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) 1 ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனு பொய்யானது. இம்மனு சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் கடந்த 28.03.2022 ம் தேதியன்று மனுதாரர் உடல்நிலை சரியில்லாததை நிரூபிக்க தகுந்த ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. கடந்த 28.03.2022 ம் தேதி வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்ட நிலையில் மனுதாரர் வேண்டுமென்றே ஆஜராகாமல் வழக்கை தள்ளுபடிக்கு விட்டுவிட்டார். தற்போது இவ்வழக்கை மீண்டும் இழுத்தடித்து 1 ம் எதிர்மனுதாரருக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என 1 ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) 4ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2, 3, 5, 6 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனு பொய்யானது. இம்மனு சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. வழக்கானது புதிததாக சேர்க்கப்பட்ட எதிர்மனுதாரர்களின் பதிலுரைக்காக கடந்த 28.03.2022ம் தேதியில் வாய்தா வைக்கப்பட்டிருந்தது என்பது தவறாகும். இணையவழியில் வழக்கின் வாய்தா தேதியை பார்த்த போது இணையதளம் சரியாக வேலை செய்யவில்லை என்பது பொய்யானதாகும். கடந்த 28.03.2022ம் தேதியில் மனுதாரர் உடல்நிலை சரியில்லாமல் போனது என்பது பொய்யானதாகும். அதனை நிரூபிக்க மனுதாரரால் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரரின் வழக்கறிஞர் வேறொரு நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்ததால் இவ்வழக்கை கவனிக்க இயலவில்லை என்பதும் தவறானதாகும். இவ்வழக்கில் மனுதாரருக்கு வெற்றிபெற வாய்ப்புள்ளதாக கூறுவது தவறானதாகும். கடந்த 28.03.2022ம் தேதியில் மாலை 4.05மணி வரை நீதிமன்றத்தில் மனுதாரர் ஆஜராகாததால் வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது இவ்வழக்கை மீண்டும் இழுத்தடித்து எதிர்மனுதாரர்களுக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என 2 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

4) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

6) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் வழக்கு கடந்த 21.02.2022ம் தேதியன்று மனுதாரரின்

தாயாரும், உத்தேசதரப்பினருமான 10ம் எதிர்மனுதாரரின் பதிலுரைக்காக வாய்தா போடப்பட்டு, பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, 28.03.2022ம் தேதியன்று வாய்தா போடப்பட்டது என்றும், இதுகுறித்து மனுதாரரின் வழக்கறிஞருக்கு தெரியாததால் வழக்கறிஞர் வேறொரு நீதிமன்றத்திற்கு சென்றுவிட்டதாலும், கடந்த 28.03.2022ம் தேதியன்று மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததாலும், மனுதாரராலும், அவரது வழக்கறிஞராலும் ஆஜராக இயலவில்லை என்றும், தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே கடந்த 28.03.2022ம் தேதியில் வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

(ii) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் கடந்த 28.03.2022ம் தேதியன்று மனுதாரர் உடல்நிலை சரியில்லாததை நிரூபிக்க தகுந்த ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், கடந்த 28.03.2022ம் தேதி வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்ட நிலையில் மனுதாரர் வேண்டுமென்றே ஆஜராகாமல் வழக்கை தள்ளுபடிக்கு விட்டுவிட்டார் என்றும், தற்போது இவ்வழக்கை மீண்டும் இழுத்தடித்து 1ம் எதிர்மனுதாரருக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) 2 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கானது புதிததாக சேர்க்கப்பட்ட எதிர்மனுதாரர்களின் பதிலுரைக்காக கடந்த 28.03.2022ம் தேதியில் வாய்தா வைக்கப்பட்டிருந்தது என்பது தவறு என்றும், இணையவழியில் வழக்கின் வாய்தா தேதியை பார்த்த போது இணையதளம் சரியாக வேலை செய்யவில்லை என்பது பொய்யானது என்றும், கடந்த 28.03.2022ம் தேதியில் மனுதாரர் உடல்நிலை சரியில்லாமல் போனது என்பது பொய்யானது என்றும், அதனை நிரூபிக்க மனுதாரரால் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரரின் வழக்கறிஞர் வேறொரு நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்ததால் இவ்வழக்கை கவனிக்க இயலவில்லை என்பதும் தவறானது என்றும், இவ்வழக்கில் மனுதாரருக்கு வெற்றிபெற

வாய்ப்புள்ளதாக கூறுவது தவறானது என்றும், கடந்த 28.03.2022ம் தேதியில் மாலை 4.05மணி வரை நீதிமன்றத்தில் மனுதாரர் ஆஜராகாததால் வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது இவ்வழக்கை மீண்டும் இழுத்தடித்து எதிர்மனுதாரர்களுக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என 2 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iv) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் மனுதாரர்/வாதியால் விளம்புகை, தனி சுவாதீனம், பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. கடந்த 28.03.2022ம் தேதியில் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை எனவும், அதனால் மனுதாரரின் வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி தேதியில் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என கூறுவது பொய்யானது என்றும், அதற்கான எவ்வித ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(v) இந்நிலையில் மனுதாரரால் மனுதாரர்/வாதியால் விளம்புகை, தனி சுவாதீனம், பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கில் தற்போது வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளதை கருத்தில் கொள்கையிலும், இவ்வழக்கில் 28.03.2022ம் தேதியில் வழக்கு விசாரணைக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில் மனுதாரருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என கூறும் காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும், மேலும் வழக்கினை தகுதிப்பாட்டின் அடிப்படையில் தீர்மானிப்பது இருதரப்பினருக்கும் உகந்தது என்பதாலும், மனுதாரர் இவ்வழக்கில் தங்களின் கட்சியை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு வழங்கலாம் என்பதாலும் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம்

தீர்மானிக்கிறது. இருப்பினும் இவ்வழக்கானது 8 ஆண்டுகள் பழமையான வழக்கு என்பதால் மனுதாரர், இந்நீதிமன்றத்திற்கும், எதிர்மனுதாரர்களுக்கும் ஏற்பட்ட காலவிரயத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர், 1ம் எதிர்மனுதாரருக்கு ரூ.1500/-ம், 2 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1500/-ம், 10ம் எதிர்மனுதாரருக்கு ரூ.1500/-ம் செலவுத் தொகையாக அளிக்கும்பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு ரூ.1500/-ம், 2 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1500/-ம், 10ம் எதிர்மனுதாரருக்கு ரூ.1500/-ம் செலவுத்தொகையாக 27.03.2024 க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 27.03.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.03.20 18:33:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u> இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.03.20 18:33:51 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.